**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, ஈரோடு**

முன்னிலை : திரு.R.வாஞ்சிநாதன்., B.A.,B.L.,(Hons).,L.L.M.,P.G.D in J.J & J.P

நீதித்துறை நடுவர் எண்.1, ஈரோடு

2026–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21–ம் நாள் செவ்வாய்க்கிழமை

(2057 திருவள்ளுவராண்டு, பராபவ வருடம், சித்திரை மாதம் 08–ம் நாள்)

**CNR.No.TNED040052152021**

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.190/2021**

அரசுக்காக,
காவல் உதவி ஆய்வாளர்,
ஈரோடு தாலூக்கா காவல் நிலையம், ஈரோடு,
குற்ற எண். 431/2020 ... குற்றமுறையீட்டாளர்

/ எதிர்/

பிரகாஷ் (வயது 50/2026),
த/பெ. நடராஜ் கவுண்டர்,
350–முள்ளாம்பரப்பு,
நத்தக்கவுண்டம்பாளையம் அஞ்சல்,
மொடக்குறிச்சி தாலூக்கா,
ஈரோடு. ... குற்றஞ்சாட்டப்பட்டவர்

| வரிசை எண் | விளக்கம் | விவரங்கள் | |
|---|---|---|---|
| 1. | சம்பவம் நடந்த நாள் | 03.05.2020 | |
| 2. | முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட நாள் | 05.05.2020 | |
| 3. | எதிரி கைது செய்யப்பட்ட நாள் மற்றும் பிணையில் சென்ற விபரம் மற்றும் நாள் | கைது செய்யப் பட்ட நாள் | பிணையில் சென்ற நாள் |
| | | 07.05.2020 | 13.05.2020 |
| 4. | குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள் | 24.03.2021 | |
| 5. | குற்றச்சாட்டு வனையப்பட்டு குற்றச்சாட்டு குறித்து வினவப்பட்ட நாள் | 31.03.2023 | |
| 6. | கு.வி.மு.ச. பிரிவு 317ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை தவிர மற்ற மனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட விபரம் மற்றும் அதன் முடிவுகள் | C.M.P.No.4052/2020–ல் கு.வி.மு.ச பிரிவு 437–ன் கீழான மனு கடந்த 13.05.2020–ம் தேதி அனுமதிக்கப்பட்டுள்ளது. | |



VANJI NATHAN R
Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.04.21 17:28:57 +0530

| | | | | |
|---|---|---|---|---|
| 7. | வழக்கின் சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள் | சாட்சிகள் | முதல் விசாரணை | குறுக்கு விசாரணை |
| | | அ.சா.1 | 20.01.2025 | 20.01.2025 |
| | | அ.சா.2 | 20.01.2025 | இல்லை |
| | | அ.சா.3 | 18.03.2025 | இல்லை |
| | | அ.சா.4 | 18.03.2025 | இல்லை |
| | | அ.சா.5 | 08.07.2025 | இல்லை |
| | | அ.சா.6 | 11.11.2025 | 11.11.2025 |
| | | அ.சா.7 | 11.11.2025 | 11.11.2025 |
| 8. | எதிரியிடம் குற்றம் குறித்து கு.வி.மு.ச. பிரிவு 313(1)(பி)–ன் கீழ் வினவிய நாள் | 08.01.2026 | | |
| 9. | எதிரி மீது பிடியாணை வழங்கப்பட்ட நாள் மற்றும் திரும்ப பெறப்பட்ட நாள் | பிடியாணை வழங்கப்பட்ட நாள் | பிடியாணை திரும்ப பெறப்பட்ட நாள் | |
| | | –– | –– | |
| 10. | வழக்கு தீர்ப்புக்காக ஒத்தி வைக்கப்பட்ட நாள் | 07.04.2026 | | |
| 11. | தீர்ப்பு பகரப்பட்ட நாள் | 21.04.2026 | | |

இவ்வழக்கானது கடந்த 30.03.2021–ம் தேதி, C.C.No.190/2021 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டும், எதிரிக்கு எதிராக அரசு தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்குரைஞர் நிலை 2 திருமதி.N.அனிதா அவர்கள் ஆஜராகியும், குற்றஞ்சாட்டப்பட்ட எதிரி தரப்பில் வழக்குரைஞர்கள் திரு.N.K.பிரபாகரன் மற்றும் திரு.M.சுரேஷ்குமார் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பும் கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும் இதுநாள் வரை பரிசீலனையிலிருந்து வந்து இந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் ஆராய்ந்து வழங்கும்,

**–<u>தீர்ப்புரை</u>–**

இந்த வழக்கு குற்ற விசாரணை நடைமுறை சட்டம் பிரிவு 173(2) இன் படி தாக்கல் செய்யப்பட்ட குற்ற இறுதி அறிக்கையின் அடிப்படையில் எழுந்த வழக்காகும்.



VANJI NATHAN R

Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.04.21 17:29:02 +0530

**<u>1. அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் :</u>**

கடந்த 03.05.2020–ம் தேதி, 19.30 மணிக்கு, ஈரோடு, பூந்துறை ரோடு, முள்ளாம்பரப்பு, சாட்சி–1 துரைசாமியின் வீட்டின் அருகே உள்ள குடிதண்ணீர் குழாய் அருகே வைத்து எதிரி பொது வழித்தடத்தில் சேர் போட்டு அமர்ந்திருந்தவரை, சாட்சி–1 துரைசாமி தள்ளிப்போட்டு உட்கார சொன்னபோது, எதிரி சாட்சி–1 துரைசாமியை பார்த்து அப்படித்தாண்டா உட்காருவேன் தாயோழி நீ யாருடா என்னை கேட்க என்று பொது இடத்தில் வைத்து தகாத கெட்டவார்த்தை பேசி அவமானப்படுத்தியும், எதிரி அவரது இடது கையால் சாட்சி–1 துரைசாமியை கட்டையால் தலையின் இடதுபக்கமும், முகத்திலும் அடித்து, தலையில் இரத்த காயத்தை ஏற்படுத்தியும், எதிரி சாட்சி–1 துரைசாமியிடம் கட்டையை காட்டி தாயோழி என்னைக்கு இருந்தாலும் இந்த கட்டையால்தான் சாவு என கொலைமிரட்டல் செய்துள்ள குற்றத்திற்காக எதிரி மீது இந்திய தண்டனைச் சட்டம் பிரிவுகள் 294(b), 324, 506(ii)–ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றங்கள் புரிந்துள்ளதாக ஈரோடு தாலூக்கா காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளரால் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. குற்ற இறுதி அறிக்கை மற்றும் சாட்சிகளின் வாக்குமூலங்களையும் குற்ற அறிக்கையுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களையும் பரிசீலனை செய்து பார்த்ததில், எதிரிக்கு எதிராக புலன் கொள்ளக்கூடிய குற்றங்கள் விசாரணைக்கு எடுக்க முதல் தோற்ற ஆதாரம் இருந்ததால், எதிரிக்கு எதிராக இந்திய தண்டனைச் சட்டம் பிரிவுகள் 294(b), 324, 506(ii)–ன் படியான குற்றத்தை விசாரணைக்கு எடுத்து குற்ற விசாரணை நடைமுறை சட்டம் பிரிவு 190 (1) (b) ன் படி உத்தரவிடப்பட்டு எதிரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது.

3. குற்றஞ்சாட்டப்பட்டவர் இந்நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன், குற்றஞ்சாட்டப்பட்டவர்க்கு வழக்கில் உள்ள ஆவணங்களின் நகல்கள் யாவும் பிரிவு 207 குற்ற விசாரணை நடைமுறை சட்டத்தின் படி இலவசமாக வழங்கப்பட்டன.



VANJI NATHAN R
Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.04.21 17:29:08 +0530

4. போதிய அவகாசம் கொடுக்கப்பட்டு எதிரியிடம் அரசுதரப்பில் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் குறித்து வினவியபோது எதிரி குற்றத்தை மறுத்துள்ளார். ஆவணங்களை ஆராய்ந்ததன் அடிப்படையில் எதிரி இந்நீதிமன்றம் விசாரிக்கக்கூடிய குற்றச்செயலில் ஈடுபட்டுள்ளார் என அனுமானம் செய்ய போதிய காரணங்கள் இருந்ததால், குற்ற விசாரணை நடைமுறைச் சட்டம் பிரிவு 240(1)–ன் படி எதிரி மீது இந்திய தண்டனைச் சட்டம் பிரிவுகள் 294(b), 324, 506(ii)–ன் கீழ் குற்றச்சாட்டுகள் வனைந்து வாசித்து விளக்கிக் கூறி வினவியபோது குற்றஞ்சாட்டப்பட்டவர் குற்றச் சாட்டினை மறுத்த காரணத்தினால் குற்ற விசாரணை நடைமுறைச் சட்டம் பிரிவு 242–ன் படி அரசு தரப்பில் சாட்சிகளை விசாரிக்க உத்தரவிடப்பட்டது.

5. அரசு தரப்பில் பட்டியலிடப்பட்ட 9 சாட்சிகளில், 7 சாட்சிகள் அ.சா.1 முதல் அ.சா.7 ஆக விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.7 வரையிலான சான்றாவணங்கள் மற்றும் அ.சா.பொ.1–ம் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

<u>அரசு தரப்பு சாட்சிகளிலிருந்து தெரியவரும் அரசுதரப்பு வழக்கின் சுருக்கம்:</u>

6. கடந்த 03.05.2020–ம் தேதி, இரவு 23.20 மணிக்கு, ஈரோடு அரசு தலைமை மருத்துவமனையிலிருந்து சாட்சி–1 திரு.துரைசாமி என்பவரது அசால்ட் இன்டிமேசன் கிடைக்கப் பெற்று அ.சா.6 தலைமை காவலர் திரு.அந்தோணிராஜ் உயர் அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்து ஈரோடு அரசு மருத்துவமனைக்கு சென்று சாட்சி–1 திரு.துரைசாமி என்பவரின் அசால்ட் இன்டிமேசன் பெற்று பார்க்க, அவர் உள்நோயாளியாக சிகிச்சையில் சேராமல் புற நோயாளியாக சென்றுவிட்டது தெரிந்து உயர் அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்து பொது நாட்குறிப்பில் பதிவு செய்தும், பின்னர் 05.05.2020 ம் தேதி மதியம் 12.45 மணிக்கு, அ.சா.6 அலுவலில் இருந்தபோது, சாட்சி–1 திரு.துரைசாமி நிலையம் ஆஜராகிக் கொடுத்த அ.சா.ஆ.1 எழுத்து மூலமான புகாரைப் அ.சா.6 பெற்று ஈரோடு தாலுக்கா காவல்நிலைய குற்ற எண்.431/2020 சட்டபிரிவுகள் 294(b), 324, 506(ii) இதசவில் அ.சா.ஆ.2 முதல்தகவல் அறிக்கை பதிவு செய்து முதல் தகவல் அறிக்கையையும், சாட்சி–1ன் எழுத்து மூலமான புகாரையும் கனம் குற்றவியல்



VANJI NATHAN R
Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.04.21 17:29:13 +0530

நீதித்துறை எண்.1 அவர்களுக்கு அனுப்பியும், பிற நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும், ஒரு நகலை புலன் விசாரணைக்காக அ.சா.7 உதவி ஆய்வாளர் திரு.அசோகன் அவர்களின் பார்வைக்கு வைத்துள்ளார்.

(ii) பின்னர் அ.சா.7 உதவி ஆய்வாளர் திரு.அசோகன் வழக்கை புலன்விசாரணைக்கு எடுத்துக் கொண்டு பகல் 13.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சம்பவ இடத்தை பார்வையிட்டு சாட்சிகள் அ.சா.3 திரு.இளங்கோ, அ.சா.4 திரு.சந்துரு ஆகியோர் முன்னிலையில் அ.சா.ஆ.3 பார்வை மகஜர் மற்றும் அ.சா.ஆ.4 மாதிரி வரைபடம் தயார் செய்தும், சம்பவ இடத்தில் எதிரி பிரகாஷ் விட்டு சென்ற உருட்டு கட்டை ஒன்றை மேற்படி சாட்சிகள் முன்னிலையில் 14.00 மணிக்கு அ.சா.ஆ.5 கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றி, சாட்சிகள் சாட்சி–1 திரு.துரைசாமி, அ.சா.1 திரு.கிருஷ்ணமூர்த்தி, அ.சா.2 திரு.சுப்பிரமணி, அ.சா.5 திரு.தாஜூதின் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தும், பிறகு 07.05.2020 ம் தேதி தலைமறைவாகி இருந்த எதிரி பிரகாஷ் என்பவரை நம்பகமான தகவலின் அடிப்படையில் ஈரோடு, முள்ளாம்பரப்பு பஸ் நிறுத்ததில் நின்றிருந்தவரை போலீஸ் பார்ட்டியுடன் தப்ப முயன்றவரை விசாரிக்க அவர் தனது அண்ணன் முறையான துரைசாமியை தகாத வார்த்தை பேசி, கட்டையால் அடித்து, கொலை மிரட்டல் விடுத்ததை ஒப்புக் கொண்டதால் காலை 7.00 மணிக்கு கைது செய்து, நிலையம் அழைத்து வந்து திரேக பரிசோதனை செய்து தக்க பாதுகாப்பில் வைத்தும், மேற்படி எதிரியை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியும், பின்னிட்டு தான் சம்பவ இடத்தில் கைப்பற்றிய எதிரி பயன்படுத்திய உருட்டு கட்டையை அ.சா.ஆ.6 படிவம் 91 ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தும், பின்னர் மருத்துவ அதிகாரி சாட்சி–7 திரு.ஆனந்தன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அ.சா.ஆ.7 விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று பெற்றும், சிடி ஸ்கேன் எடுக்க அறிவுறுத்தியும் புகார்தாரர் உடன்படவில்லை என்பதால் கருத்துரை வழங்க இயலாது என மருத்துவர் சான்று வழங்கினார் என்றும், 04.07.2020 ம் தேதி எதிரி மீது சட்டபிரிவுகள் 294(b), 324, 506 (ii) இதசவில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.



VANJI NATHAN R
Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.04.21 17:29:19 +0530

7. அரசு தரப்பு சாட்சியங்களிலிருந்து எதிரிக்கு பாதகமாக உள்ள பகுதியை விளக்கி குற்ற விசாரணை நடைமுறை சட்டம் பிரிவு 313 (1) (பி)–ன் கீழ் வினவ குற்றஞ்சாட்டப்பட்டவர் சாட்சிகளின் சாட்சியங்களை பொய் சாட்சி என்றும், எதிரி தரப்பில் விசாரிக்க சாட்சிகள் உண்டு எனக் குறிப்பிட்டுவிட்டு, பின்னர் சாட்சிகள் யாரையும் விசாரணைக்கு உட்படுத்தவில்லை. எனவே எதிரி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டு இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது.

**இந்த வழக்கில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை:–**

8. இவ்வழக்கில் அரசு தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள இந்திய தண்டனைச் சட்டம் பிரிவுகள் 294(b), 324, 506(ii)–ன் கீழான குற்றச்சாட்டுகள் எவ்வித ஐயப்பாட்டிற்கும் இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா என்பதே தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை ஆகும்.

**தீர்வு:–**

9. இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. எதிரி தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில் சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியான அ.சா.1–ன் சாட்சியம் நம்பத்தகுந்த வகையில் இல்லை என்றும், சம்பவத்தை கண்ணுற்ற மற்ற சாட்சிகளான அ.சா.2 மற்றும் அ.சா.5, பார்வை மகஜர் சாட்சிகளான அ.சா.3 மற்றும் அ.சா.4 ஆகிய சாட்சிகள் பிறழ்சாட்சிகளாக பாவிக்கப்பட்டுள்ளார்கள் என்றும், எனவே அரசுதரப்பு வழக்கு சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படாத காரணத்தினால் எதிரியை விடுதலை செய்ய வேண்டும் என்றும் வாதிட்டார்.

10. அரசுதரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்குரைஞர் தனது வாதத்தில் சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியான அ.சா.1 சம்பவம் குறித்தும், எதிரி குறித்தும் தெளிவாக சாட்சியம் அளித்துள்ளார் என்றும், மேலும் இந்த வழக்கில் புலன்விசாரணை குறித்து அ.சா.6 மற்றும் அ.சா.7 அரசுதரப்பு வழக்கை ஒத்துரைத்து சாட்சியம் அளித்துள்ளதால் எதிரி மீதான குற்றச்சாட்டுகள் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்றும் வாதிட்டார்.



VANJI NATHAN R
Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.04.21 17:29:24 +0530

11. அ.சா.1, அ.சா.2 மற்றும் அ.சா.5 ஆகிய சாட்சிகள் சம்பவத்தை கண்ணுற்ற சாட்சிகள் என்பதும், அ.சா.3 மற்றும் அ.சா.4 பார்வை மகஜர் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் சாட்சிகள் என்பதும், அ.சா.6 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த தலைமை காவலர் என்பதும், அ.சா.7 இவ்வழக்கின் புலன்விசாரணை அலுவலர் என்பதும் அரசு தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலிக்கும் போது தெரியவருகிறது.

12. சாட்சி–1 திரு.துரைசாமி மற்றும் அவருடைய தம்பி அ.சா.1 திரு.கிருஷ்ணமூர்த்தி என்பவருக்கும் நீண்ட நாட்களாக பேச்சுவார்த்தை இல்லை என்றும், கடந்த 03.05.2020–ம் தேதி, மாலை சுமார் 07.30 மணியளவில், சாட்சி–1 திரு.துரைசாமி அவருடைய வீட்டின் அருகே உள்ள விநாயகர் கோவில் முன்பு உள்ள பொது தண்ணீர் குழாயில் தண்ணீர் பிடித்துக்கொண்டிருந்தபோது, சாட்சி–1ன் அப்பாவின் உடன் பிறந்த தம்பி நடராஜ் மகன் பிரகாஷ் பைப்பின் அருகே சேர்போட்டு தண்ணீர் பிடிக்க தொந்தரவு செய்துள்ளார் என்றும், அதனால் சாட்சி–1 சேரை தள்ளிப்போட்டு உட்காருமாறு கூறியதற்கு, என் கடைமுன்பு அப்படிதாண்டா போட்டு உட்காருவேன் தாயோழி நீ யாருடா கேட்க என திட்டினார் என்றும், சாட்சி–1 ஓர் அண்ணன் என்றுகூட பாராமல் எதுக்குடா கெட்ட வார்த்தை பேசுகிறாய் என்று கேட்டதாகவும், எதுத்தாடா பேசுறாய் என்று திட்டி அருகில் கிடந்த கட்டையை எடுத்து தலையில் இடது புறம் அடித்து விட்டார் என்றும், முகத்திலும் அடித்து விட்டார் என்றும், இதை சாட்சி–1ன் தம்பி மற்றும் அக்கம் பக்கத்தினர் ஓடி வந்து பார்த்ததும் கட்டையை காட்டி தாயோழி என்னைக்கு இருந்தாலும் இந்த கட்டையால் தான் சாவு என மிரட்டிவிட்டு கட்டையை போட்டுவிட்டு ஓடிவிட்டதாகவும், சாட்சி–1க்கு இரத்தகாயம் ஏற்பட்டுவிட்டதால் சாட்சி–1–ன் தம்பி அ.சா.1–ன் உதவியுடன் ஈரோடு அரசு மருத்துவமனைக்கு சென்று புறநோயாளியாக சிகிச்சை பெற்றும்(உள்நோயாளியாக சேர விரும்பவில்லை) பின்னர் வீட்டிற்கு வந்துவிட்டாகவும், உறவினர் என்பதால் உடனடியாக புகார் கொடுக்கவில்லை என்றும், அதனால் சாட்சி–1 அவருடைய உறவினர்களிடம் கலந்து ஆலோசித்துவிட்டு இதுகுறித்து கடந்த 05.05.2020–ம் தேதி அ.சா.ஆ.1–ன் படி ஈரோடு தாலூக்கா காவல்நிலையத்தில் சாட்சி–1 திரு.துரைசாமி புகார்



VANJI NATHAN R Digitally signed by VANJI NATHAN R Date: 2026.04.21 17:29:30 +0530

அளித்துள்ளார்.

13. இவ்வழக்கை பதிவு செய்த அ.சா.6 தனது சாட்சியத்தில் கடந்த 03.05.2020–ம் தேதி இரவு 23.20 மணிக்கு, ஈரோடு அரசு தலைமை மருத்துவமனையிலிருந்து துரைசாமி, வயது 52, த/பெ. அருணாச்சலம் என்பவரது அசால்ட் இன்டிமேசன் கிடைக்கப் பெற்று உயர் அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்து ஈரோடு அரசு மருத்துவமனைக்கு சென்று துரைசாமி என்பவரை பார்க்க, அவர் உள் நோயாளியாக சிகிச்சையில் சேராமல் புற நோயாளியாக சென்றுவிட்டது தெரிந்து உயர் அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்து பொது நாட்குறிப்பில் பதிவு செய்துள்ளதாகவும், பின்னர் 05.05.2020 ம் தேதி மதியம் 12.45 மணிக்கு தான் அலுவலில் இருந்தபோது, சாட்சி–1 திரு.துரைசாமி என்பவர் நிலையம் ஆஜராகிக் கொடுத்த எழுத்து மூலமான புகாரைப் பெற்று ஈரோடு தாலுக்கா காவல்நிலைய குற்ற எண்.431/2020 சட்டபிரிவுகள் 294(b), 324, 506(ii) இதசவின் படி அ.சா.ஆ.2 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்பது தெரியவருகிறது.

14. இவ்வழக்கின் நிகழ்நிலை புகார்தாரரான சாட்சி–1 திரு.துரைசாமி கடந்த 17.07.2024–ம் தேதி இறந்துவிட்டபடியால், அவர் அரசுதரப்பில் சாட்சியாக விசாரிக்கப்படவில்லை. புகாரில் தனக்கு இரத்தக்காயம் ஏற்பட்டதாகவும், தனது தம்பியின் உதவியுடன் ஈரோடு அரசு மருத்துவமனையில் புறநோயாளியாக சிகிச்சை பெற்றதாகவும், உள்நோயாளியாக சேர விரும்பவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அ.சா.ஆ.7 விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றை பரிசீலித்து பார்க்கும்போது, பட்டியல் சாட்சி–1 திரு.துரைசாமி அளவுக்கு அதிகமாகவும், சம்பந்தம் இல்லாமலும் அவ்வப்போது பேசியதாகவும், அவரது இடது தலையில் கிழிந்த காயமும், வலது முன் தலையில் சிராய்ப்பு காயமும் காணப்பட்டதாகவும் அவரை உள்நோயாளியாக சிகிச்சைக்கு சேர்த்து CT Scan எடுக்க பரிந்துரைக்கப்பட்டபோதும், அவர் அதற்கு மறுத்துவிட்டதால் காயங்கள் குறித்து இறுதி கருத்துரை வழங்க இயலவில்லை என குறிப்பிடப்பட்டுள்ளது தெரியவருகிறது. அ.சா.1 தனது சாட்சியத்தில்



VANJI NATHAN R
Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.04.21 17:29:36 +0530

தனது அண்ணனுக்கு இரத்தக்காயம் ஏற்பட்டதால் ஈரோடு அரசு மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை அளித்துவிட்டு கொரோனா சமயம் என்பதால் தனியார் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றதாக கூறியுள்ளபோதும், அதுகுறித்து புகாரில் எடுத்துரைக்கப்படவில்லை என்பதும், தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதற்கான ஆதாரங்களை தாக்கல் செய்யவில்லை என்பதும் தெரியவருகிறது. எனவே ஈரோடு அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சிசிக்சை பெற பட்டியல் சாட்சி–1 திரு.துரைசாமி ஏன் ஒத்துழைக்கவில்லை என்பதற்கு தகுந்த காரணமோ, விளக்கமோ முன்வைக்கப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

15. அ.சா.ஆ.1 புகாரில் தனக்கும் தனது தம்பியான அ.சா.1 திரு.கிருஷ்ணமூர்த்திக்கும் நீண்ட நாட்களாக பேச்சு வார்த்தை இல்லை என குறிப்பிடப்பட்டுள்ளபோதும், அது தவறு என அ.சா.1 தனது குறுக்குவிசாரணையில் மறுத்துள்ளார். தங்கள் குடும்பத்தாருக்கும், எதிரியின் குடும்பத்தாருக்கும் பூர்விக சொத்தில் கருத்துவேறுபாடு உள்ளது என புகாரின் இறுதியில் ஒருவரி சேர்க்கப்பட்டுள்ளது. ஆனால் எதிரி குடும்பத்திற்கும் தங்கள் குடும்பத்திற்கும் சொத்து சம்பந்தமாக பிரச்சனை இருந்ததை அ.சா.1 தனது சாட்சியத்தில் மறுத்துள்ளார். சம்பவ சமயத்தில் பட்டியல் சாட்சி–1 துரைசாமி என்பவருக்கு 52 வயது என்பதும், அ.சா.ஆ.7 ஆவணத்தின் படி அவர் சரியான மனநிலையில் இருந்திருக்கவில்லை என்பதையும் அறியமுடிகிறது. சம்பவம் நடந்த அன்றோ அல்லது அதற்கு மறுநாளோ புகார் அளிக்கப்படாத நிலையில், தனது உறவினர்களிடம் கலந்து ஆலோசித்து விட்டு காவல்நிலையம் சென்று புகார் அளிக்கப்பட்டுள்ளது தெரியவருவதால் உண்மையில் பட்டியல் சாட்சி–1 திரு.துரைசாமி தன்னிச்சையாக காவல்நிலையம் சென்று புகார் அளித்தாரா என்பதே சந்தேகத்திற்குரிய சங்கதியாக உள்ளது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

16. இவ்வழக்கின் சம்பவத்தை கண்ணுற்ற சாட்சி–1ன் தம்பியான அ.சா.1 திரு.கிருஷ்ணமூர்த்தி தன்னுடைய சாட்சியத்தில் இவ்வழக்கின் புகார்தாரரான தனது



VANJI NATHAN R
Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.04.21 17:29:40 +0530

அண்ணன் சாட்சி–1 திரு.துரைசாமி கடந்த 17.07.2024 ம் தேதி இறந்துவிட்டார் என்றும், கடந்த 03.05.2020 ம் தேதி, மாலை 7.30 மணிக்கு, தான் வீட்டின் முன்பு நின்று கொண்டிருந்தபோது தனது அண்ணன் துரைசாமி விநாயகர் கோவில் அருகில் இருக்கும் தண்ணீர் பைப்பில் தண்ணீர் பிடிக்க சென்றபோது, ஆஜர் எதிரி அங்கு சேர் போட்டு உட்கார்ந்து கொண்டு இடையூறு செய்தார் என்றும், அதை தனது அண்ணன் கேட்டதற்கு தகாத வார்த்தையால் பேசி, அங்கிருந்த அ.சா.பொ.1 ஆன மரக்குச்சியை எடுத்து ஆஜர் எதிரி அவரது வலது கையில் விரல் இல்லாததால் இடது கையால் தனது அண்ணனின் மண்டையில் அடித்து இரத்தக் காயம் ஏற்படுத்திவிட்டார் என்றும், சத்தம் கேட்டு அங்கு சென்றபோது, குச்சியை அங்கேயே போட்டுவிட்டு என்னைக்கு இருந்தாலும் உன்னை கொல்லாமல் விட மாட்டேன் என மிரட்டிவிட்டு சென்றார் என்றும், தனது அண்ணனுக்கு இரத்தக் காயம் ஏற்பட்டதால் தான் ஈரோடு அரசு மருத்துவமனைக்கு அழைத்துவந்து முதலுதவி சிகிச்சை அளித்துவிட்டு, அச்சமயம் கொரோனா சமயம் என்பதால் தாங்கள் தனியார் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றதாகவும்,அதன்பின் இது சம்மந்தமாக தாலுக்கா காவல்நிலையத்தில் தனது அண்ணன் புகார் அளித்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார். ஆனால் அ.சா.1 தனது குறுக்குவிசாரணையில் தான் சத்தம் கேட்டு போய் பார்த்ததாகவும், தான் செல்வதற்குள் எதிரி தன் அண்ணனை அடித்துவிட்டார் என்றும், அதன் பின்பு தடுத்ததாகவும், அடிப்பதற்கு முன்பு அவர்கள் என்ன பேசிக்கொண்டார்கள் என்பது தனக்கு ஞாபகம் இல்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளதை பார்க்கும்போது, எதிரி தகாத வார்த்தை பேசியதையோ, மரக்குச்சியால் அடித்ததையோ, மிரட்டல் விடுத்ததையோ நேரடியாக பார்த்திருக்க வாய்ப்பில்லை என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. எனவே அ.சா.ஆ.1 புகார் மற்றும் தனது வாக்குமூலத்திற்கு முரணாகவும், உண்மை சங்கதிகளை மறைத்தும் அ.சா.1 சாட்சியம் அளித்துள்ளதாலும், சம்பவத்தை அ.சா.1 நேரடியாக பார்க்கவில்லை என்பதாலும், அ.சா.1–ன் சாட்சியம் நம்பும் படியாக இல்லை என்பதோடு, அரசுதரப்பு வழக்கிற்கு ஆதரவாக அமையவில்லை என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.



VANJI NATHAN R
Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.04.21 17:29:46 +0530

17. சம்பவத்தை கண்ணுற்ற மற்றொரு சாட்சியான அ.சா.2 திரு.சுப்பிரமணி தன்னுடைய முதல் விசாரணையில் தான் எதுவும் பார்க்கவில்லை என்றும், வழக்கு குறித்து தனக்கு எதுவும் தெரியாது என்றும், ஆஜர் எதிரியையும், புகார்தாரரையும் தனக்கு தெரியும் என்றும், இவ்வழக்கு சம்மந்தமாக போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்று சாட்சியம் அளித்துள்ளார்.

18. சம்பவத்தை கண்ணுற்ற மற்றும் ஒரு சாட்சியான அ.சா.5 திரு.தாஜூதின் தன்னுடைய முதல் விசாரணையில் ஆஜர் எதிரியை தனக்கு தெரியும் என்றும், அவரது கடைக்கு முன்னால் தான் டீக்கடை வைத்துள்ளதாகவும், பட்டியல் சாட்சி –1 துரைசாமி, அ.சா.1 கிருஷ்ணமூர்த்தியை தனக்கு தெரியாது என்றும், தான் எந்த சம்பவத்தையும் பார்க்கவில்லை என்றும், இவ்வழக்கு குறித்து தனக்கு எந்த விவரமும் தெரியாது என்றும், போலீசார் கேட்டுக் கொண்டதன் பேரில் சாட்சி சொல்ல வந்ததாகவும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

19. மேற்படி அ.சா.2 மற்றும் அ.சா.5 ஆகியோர் அரசுதரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியங்கள் அளித்துள்ளதால் பிறழ்சாட்சிகளாக பாவிக்கப்பட்டு, அரசுதரப்பால் குறுக்குவிசாரணை செய்யப்பட்டபோதும், எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டுகளை நிரூபணம் செய்யக்கூடிய வகையில் எவ்வித சாட்சியமும் பெறப்படாதது அரசுதரப்பு வழக்கின் மீது மேலும் சந்தேகத்தையும், பாதிப்பையும் ஏற்படுத்தியுள்ளது.

20. வழக்கின் புலன்விசாரணை அதிகாரியான அ.சா.7 கடந்த 05.05.2020–ம் தேதி பகல் 13.30 மணிக்கு, சம்பவ இடம் சென்று சாட்சிகள் அ.சா.3 திரு.இளங்கோ மற்றும் அ.சா.4 திரு.சந்துரு ஆகியோர் முன்னிலையில் சம்பவம் இடத்தை பார்வையிட்டு அ.சா.ஆ.3 பார்வை மகஜர் மற்றும் அ.சா.ஆ.4 மாதிரி வரைபடம் தயார் செய்ததாக சாட்சியம் அளித்துள்ளார். ஆனால் பார்வை மகஜர் சாட்சிகளாக விசாரிக்கப்பட்டுள்ள அ.சா.3 திரு.இளங்கோ மற்றும் அ.சா.4 திரு.சந்துரு தங்களுடைய சாட்சியத்தில் ஆஜர் எதிரியை தெரியும் என்றும், தங்களது கடைக்கு அருகில் எண்ணெய் கடை வைத்து



VANJI NATHAN R
Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.04.21 17:29:51 +0530

நடத்தி வருகிறார் என்றும், இவ்வழக்கில் காயம் பட்ட துரைசாமியை தங்களுக்கு தெரியாது என்றும், என்ன பிரச்சனை என்று தங்களுக்கு தெரியாது என்றும், வழக்கு குறித்து வேறு எந்த விவரமும் தெரியாது என்றும், பார்வை மகஜர் மற்றும் கைப்பற்றுதல் மகஜரிலுள்ள கையெழுத்து தங்களுடையது அல்ல என்றும், போலீசார் தங்களை விசாரிக்கவில்லை என்று சாட்சியம் அளித்துள்ளதால் பிறழ்சாட்சிகளாக பாவிக்கப்பட்டு, அரசுதரப்பால் குறுக்குவிசாரணை செய்யப்பட்டபோதும், அரசு தரப்புக்கு ஆதரவாக எவ்வித சாட்சியமும் பெறப்படவில்லை. மேற்படி அ.சா.3 மற்றும் அ.சா.4–ன் சாட்சியங்களை பரிசீலித்து பார்க்கும்போது உண்மையில் போலீசார் சம்பவ இடத்திற்கு சென்று சாட்சிகள் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்களா என்பதும், சுமார் 80 செ.மீ நீளமுள்ள கட்டை எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்டதா என்பதும் சந்தேகத்திற்கு உரிய சங்கதியாக உள்ளது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

21. வழக்கின் எதிரி கடந்த 03.05.2020–ம் தேதி, மாலை 07.30 மணிக்கு, பொது இடத்தில் வைத்து பட்டியல் சாட்சி–1 திரு.துரைசாமியை தகாத வார்த்தைகளால் பேசி, கட்டையால் தாக்கி, சிறுகாயத்தை ஏற்படுத்தி, கொலை மிரட்டல் விடுத்ததை நிரூபணம் செய்யக்கூடிய வகையில் தகுந்த சாட்சிய சான்றாவணங்கள் அரசுதரப்பால் முன்னிலைப்படுத்தப்படவில்லை. இவ்வழக்கின் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட நிகழ்நிலை புகார்தாரர் இறந்துவிட்டபடியாலும், சம்பவத்தை கண்ணுற்ற அ.சா.1–ன் சாட்சியம் நம்பத்தகுந்த வகையில் இல்லை என்பதாலும், மேலும் அ.சா.2 முதல் அ.சா.5 வரையிலானவர்கள் பிறழ்சாட்சிகளாக பாவிக்கப்பட்டுள்ளதும் அரசு தரப்பு வழக்கில் சந்தேகத்தையும், பாதிப்பையும் ஏற்படுத்தியுள்ள நிலையில், தற்போது எஞ்சி இருப்பது இந்த வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த அ.சா.6 மற்றும் புலன்விசாரணை செய்து இறுதி அறிக்கை தாக்கல் செய்த அ.சா.7–ன் சாட்சியங்கள் மட்டுமே ஆகும். அ.சா.6 மூலமாக அ.சா.ஆ.1 மற்றும் அ.சா.ஆ.2, அ.சா.7 மூலமாக அ.சா.ஆ.3 முதல் அ.சா.ஆ.7 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அ.சா.6–ன் மூலமாக அ.சா.ஆ.1 புகாரை பெற்று அ.சா.ஆ.2 முதல்



VANJI NATHAN R
Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.04.21 17:29:57 +0530

தகவல் அறிக்கை பதிவு செய்தது குறித்தும், அ.சா.7–ன் மூலமாக வழக்கை புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அ.சா.ஆ.3 பார்வை மகஜர் மற்றும் அ.சா.ஆ.4 மாதிரி வரைபடம் தயார் செய்தது குறித்தும், சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தது குறித்தும், எதிரியை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியது குறித்தும், வழக்குச் சொத்தை கைப்பற்றி புலன்விசாரணையை முடித்து எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தது குறித்தும் சாட்சியம் அளித்துள்ளார். சாட்சி–1 திரு.துரைசாமி அளித்த அ.சா.ஆ.1 புகாரின் அடிப்படையில் வழக்கு பதிவு செய்து புலன் விசாரணை மேற்கொண்டு எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தது குறித்து அ.சா.6 மற்றும் அ.சா.7–ன் சாட்சியங்கள் அமைந்துள்ளதேயன்றி எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டுகளை ஐயத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யக்கூடிய வகையில் அவர்களது சாட்சியங்கள் அமைந்திருக்கவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே அ.சா.6 மற்றும் அ.சா.7–ன் சாட்சியங்களை மட்டும் வைத்து எதிரிக்கு எதிரான குற்றம் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்பட்டுவிட்டதாக முடிவுக்கு வர இயலாது என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

22. இறுதியாக, மேலே ஆராய்ந்த வகையில் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளானது அரசுதரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களின் வாயிலாக ஐயத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்படவில்லை என தீர்மானித்து, மேலே ஆராய்ந்த காரணங்களின் அடிப்படையில் எழுந்துள்ள சந்தேகங்களின் பலனை எதிரிக்கு வழங்கி, எதிரி மீதான இந்திய தண்டனைச் சட்டம் பிரிவுகள் 294(b), 324, 506(ii)–ன் கீழான குற்றச்சாட்டுகளை பொறுத்தும், எதிரி குற்றவாளி இல்லை என்று முடிவு செய்து எதிரியை மேற்சென்ன குற்றச்சாட்டுகளிலிருந்து குற்ற விசாரணை நடைமுறைச் சட்டம் பிரிவு 248(1)–ன் படி விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது.

23. வழக்கு நிலுவையில் இருந்த சமயத்தில் எதிரி பிணையில் இருந்தபோதும், பிணை பத்திரம் எழுதி கொடுக்கவில்லை. வழக்கு விசாரணையின் முடிவில் எதிரியும்,



VANJI NATHAN R
Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.04.21 17:30:03 +0530

பிணையதாரர்களும் சேர்ந்து கு.வி.மு.ச பிரிவு 437–A–ன் கீழ் எழுதிக்கொடுத்த பிணைப்பத்திரம் ஆறு மாதகாலத்திற்கு நிலுவையில் இருக்கும் என்றும், மேல்முறையீடு எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை எனில், பிணைபத்திரம் செயல் இழந்துவிடும் என்றும் இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

24. இவ்வழக்கில் கைப்பற்றப்பட்டு தாக்கல் செய்யப்பட்ட பி.ஆர்.எண். 78/2021–ல் உள்ள சுமார் 80 செமீ நீளமுள்ள கட்டை ஒன்றை மேல் முறையீட்டுக் காலத்திற்கு பின்னிட்டு சட்டநடைமுறைகளின்படி அகற்றம் செய்ய வேண்டும் என்று இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் நேரடியாக சுருக்கெழுத்து – தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, மீண்டும் என்னால் சரிபார்க்கப்பட்டு, பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21–ம் நாளான இன்று என்னால் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

VANJI NATHAN R
Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.04.21 17:30:08 +0530

நீதித்துறை நடுவர் எண்.1,
ஈரோடு

**இணைப்பு**

**அரசு தரப்பு சாட்சிகள் :**

| வரிசை எண். | அரசுதரப்பு சாட்சி எண். | பெயர் | விவரிப்பு |
|---|---|---|---|
| 1. | அ.சா.1 | திரு.கிருஷ்ணமூர்த்தி | சம்பவத்தை கண்ணுற்ற சாட்சி |
| 2. | அ.சா.2 | திரு.சுப்பிரமணி | சம்பவத்தை கண்ணுற்ற சாட்சி |
| 3. | அ.சா.3 | திரு.இளங்கோ | பார்வை மகஜர் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் சாட்சி |
| 4. | அ.சா.4 | திரு.சந்துரு | பார்வை மகஜர் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் சாட்சி |
| 5. | அ.சா.5 | திரு.தாஜூதின் | சம்பவத்தை கண்ணுற்ற சாட்சி |
| 6. | அ.சா.6 | திரு.அந்தோணிராஜ் | முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த தலைமை காவலர் |



VANJI NATHAN R
Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.04.21 17:30:14 +0530

| | | | |
|---|---|---|---|
| 7. | அ.சா.7 | திரு.அசோகன் | விசாரணை அதிகாரி |

**அரசு தரப்பு சான்றாவணங்கள் :**

| வரிசை எண். | அரசு தரப்பு சான்றாவணம் எண். | குறியீடு செய்யப்பட்ட தேதி | குறியீடு செய்யப்பட்ட ஆவணம் | யாரால் சான்றாவணம் நிரூபிக்கப்பட்டது/சான்றொப்பம் இடப்பட்டது |
|---|---|---|---|---|
| 1. | அ.சா.ஆ.1 | 11.11.2025 | புகார் | அ.சா.6 |
| 2. | அ.சா.ஆ.2 | 11.11.2025 | முதல்தகவல் அறிக்கை | அ.சா.6 |
| 3. | அ.சா.ஆ.3 | 11.11.2025 | பார்வை மகஜர் | அ.சா.7 |
| 4. | அ.சா.ஆ.4 | 11.11.2025 | மாதிரி வரைபடம் | அ.சா.7 |
| 5. | அ.சா.ஆ.5 | 11.11.2025 | கைப்பற்றுதல் மகஜர் | அ.சா.7 |
| 6. | அ.சா.ஆ.6 | 11.11.2025 | படிவம் 91 | அ.சா.7 |
| 7. | அ.சா.ஆ.7 | 11.11.2025 | விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றிதழ் | அ.சா.7 |

**எதிரி தரப்பில் சாட்சி மற்றும் சான்றாவணங்கள் : ஏதுமில்லை.**

**அரசுதரப்பு சான்று பொருள் : ஒன்று (பி.ஆர்.எண். 78/2021)**

| வரிசை எண். | அரசு தரப்பு சான்றுபொருள் எண். | குறியீடு செய்யப்பட்ட தேதி | குறியீடு செய்யப்பட்ட சான்றுபொருள் | யாரால் சான்றாவணம் நிரூபிக்கப்பட்டது /சான்றொப்பம் இடப்பட்டது |
|---|---|---|---|---|
| 1 | அ.சா.பொ.1 | 20.01.2025 | சுமார் 80 செமீ நீளமுள்ள கட்டை ஒன்று | அ.சா.1 |

**குறிப்பு :**

1. எதிரி பிணையில் உள்ளார்.
2. சாட்சிகள் யாரும் 3 வாய்தாக்களுக்கு மேல் அழைக்கப்படவில்லை.
3. தீர்ப்புரை குறித்து காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

VANJI NATHAN R

Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.04.21 17:30:19 +0530

நீதித்துறை நடுவர் எண்.1,
ஈரோடு